# Some Gentle Reminders…..

- Please login using your child's name.
  Eg, ( Ravi 5RE, Mala 6Ha)
- Please mute your microphone and switch off video at all times.
- No photography or videography allowed.
- All the slides will be made available on the school website at a later time.



# தொடக்கநிலை 5 & 6 பெற்றோருக்கான விளக்கக்கூட்டம் 2022



RIVERVALE PRIMARY SCHOOL

- தேர்வு அமைப்புமுறை
- பாட மீள்நோக்க உத்திமுறைகள்




# தொடக்கநிலை 5 முறைசார்ந்த தேர்வு

| தவணை | 1<br><br>(10%) | 2<br><br>(10%) | 3<br><br>(10%) | 4<br><br>(70%) |
|---|---|---|---|---|
| தேர்வு | தவணை 1 மதிப்பீடு | வாய்மொழித் தேர்வு | மதிப்பீட்டுத் தேர்வு | ஆண்டிறுதித் தேர்வு |

# தொடக்கநிலை 6 முறைசார்ந்த தேர்வு

| தவணை | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| தேர்வு | தொடர் மதிப்பீட்டுத் தேர்வு | அரையாண்டுத் தேர்வு | முன்னோட்டத் தேர்வு | தொடக்கப்பள்ளி இறுதியாண்டுத் தேர்வு |

# மொழித்திறன்கள்


அடிப்படை மொழித்திறன்கள்
கொள்திறன்கள்
கேட்டல்
படித்தல்
பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்
ஆக்கத்திறன்கள்
எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்
பேசுதல்
எழுதுதல்
கருத்துப்பரிமாற்றத் திறன்கள்

# தாள் 1 (கட்டுரை – 40 ம.நே)

மாணவர்கள் தலைப்புக் கட்டுரை அல்லது படக்கட்டுரையைத் தேர்ந்தெடுத்து கட்டுரை எழுத வேண்டும்.

படக்கட்டுரைக்குத் தற்போது உள்ளது போலவே 6 கட்டங்களுள் 5 கட்டங்களில் மட்டுமே படங்கள் இடம்பெறும். 6-வது கட்டம் வினாக்குறியுடன் வெற்றிடமாக இருக்கும். அதோடு 8 உதவிச்சொற்கள்/சொற்றொடர்கள் வழங்கப்படும்.



## தாள் - 1

இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் உள்ளன. அவற்றுள் **ஒன்றுக்கு மட்டும்** விடையளிக்கவும். இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும், வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும், கட்டுரை எழுதுவதற்கும் மொத்தம் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.


தேர்ந்தெடுத்த கட்டுரையை/கதையை **100 சொற்களுக்குக் குறையாமல்** எழுது.

**வினா 1**

உனது பொறுப்பற்ற செயல் உனக்குக் கற்றுக்கொடுத்த ஒரு பாடம்

**கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.**

- உனக்கு என்ன செயல் கொடுக்கப்பட்டது
- நீ அதில் எவ்வாறு ஈடுபட்டாய்
- நீ அதில் பொறுப்புடன் ஈடுபடாததன் காரணம்
- அதிலிருந்து நீ கற்றுக்கொண்ட பாடம்


SCHOOL CANTEEN
Fishball Noodles
1
2
USE
ME
3
4
5
6

# மீள்நோக்க உத்திமுறைகள்

| தொடக்கநிலை 5, 6 | சூழல், தொடர்படங்கள், உதவிச்சொற்கள், சிறு குறிப்புகள் முதலியவற்றைப் பயன்படுத்தித் தம் கருத்துகளை நிரல்பட எழுதுவதற்குப் பயிற்சி பெறுவர். |
|---|---|

| பிரிவு | வகுப்பு | சொல்லளவு |
|---|---|---|
| தமிழ் | தொடக்கநிலை 3 | 40 சொற்கள் |
| | தொடக்கநிலை 4 | 60 சொற்கள் |
| | தொடக்கநிலை 5 | 80 சொற்கள் |
| | தொடக்கநிலை 6 | 100 சொற்கள் |
| உயர்தமிழ் | தொடக்கநிலை 5 | 120 சொற்கள் |
| | தொடக்கநிலை 6 | 150 சொற்கள் |

# தாள் 1 - கட்டுரை மீள்நோக்க உத்திமுறைகள்

1. சூழலைப் புரிந்துகொண்டு தலைப்பு கட்டுரை எழுதுதல்.

2. பழமொழிகள், இணைமொழிகள் மற்றும் மரபுத்தொடர்களைப் பயன்படுத்துதல்.

3. மொழியில் கவனம் அவசியம் – இலக்கணப் பிழைகள் கருத்துச் சிதைவை விளைவிக்கும்.



4. முன்னுரைக்கும் முடிவுரைக்கும் தொடர்பு இருத்தல். பல்வேறு விதமாக முன்னுரையைத் தொடங்குதல், முடிவுரையை முடித்தல்

5. படங்களைத் தொடர்புபடுத்தி கோர்வையாகவும் நிரல்படவும் எழுதுதல். (இணைப்புச் சொற்கள் பயன்பாடு)

6. உதவிச்சொற்களை படித்துப் புரிந்துகொண்டு, அனைத்து உதவிச்சொற்களையும் பயன்படுத்துதல்.



# தாள் 2 (90 ம.நி)

# மொழிப்பயன்பாடு மற்றும் கருத்தறிதல்

# புத்தகம் A

- வேற்றுமை, செய்யுள், அடைமொழி/எச்சம்
- முன்னுணர்வுக் கருத்தறிதல் – 4 தெரிவுகள் வழங்கப்படும்
- தெரிவுவிடைக் கருத்தறிதல் – 4 வினாக்களோடு ஒரு

சொற்பொருள் வினாவும் இடம்பெறும்



## A1 வேற்றுமை

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

Q1 ஒவ்வொரு இனத்தாரும் தங்கள் ______________ பாரம்பரிய உடை அணிந்து கொண்டாடி மகிழ்வார்கள்.

(1) விழாக்களுக்கு
(2) விழாக்களை
(3) விழாக்களது
(4) விழாக்களால்

Q2 என் மாமா மாலை ______________ உடற்பயிற்சி செய்வதை விரும்புவார்.

(1) நேரத்துக்கு
(2) நேரத்தோடு
(3) நேரத்தால்
(4) நேரத்தில்

Q3 அம்மா சந்தைக்குச் சென்று காய்கறிகள், பழங்கள் ______________ மீனையும் வாங்கி வந்தார்.

(1) ஆகியவற்றுடன்
(2) ஆகியவற்றால்
(3) ஆகியவற்றுக்கு
(4) ஆகியவற்றை

Q4 வைரக்கற்கள் ______________ வெட்டி எடுக்கப்படும் ஒருவகைக் கல்லே ஆகும்.

(1) நிலத்தை
(2) நிலத்தால்
(3) நிலத்திலிருந்து
(4) நிலத்துடன்

Q5 தந்தையின் ______________ செவிசாய்க்காத மகன் வீட்டை விட்டு வெளியேறினான்.

(1) கருத்தை
(2) கருத்துக்கு
(3) கருத்தில்
(4) கருத்தால்

## A2 செய்யுள் / பழமொழி

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

Q6 ______________ அழகு கற்றுணர்ந்து அடங்கல்.

(1) எளியோர்க்கு
(2) அறிஞர்க்கு
(3) மந்திரிக்கு
(4) உண்டிக்கு

Q7 தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால் தன்னையே ______________ சினம்.

(1) வெல்லும்
(2) ஆளும்
(3) ஒழிக்கும்
(4) கொல்லும்

Q8 சிறு துரும்பும் பல் ______________ உதவும்.

(1) குத்த
(2) துலக்க
(3) தோண்ட
(4) தேய்க்க

Q9 வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் ______________ போலக் கெடும்.

(1) போட்டது
(2) வீசியது
(3) வைத்தூறு
(4) ஓம்புதல்

Q10 தொட்டனைத்து ஊறும் மணற்கேணி ______________ கற்றனைத்து ஊறும் அறிவு.

(1) மாந்தர்க்கு
(2) மக்களுக்கு
(3) வல்லவனுக்கு
(4) மந்திரிக்கு

**A3 அடைமொழி / எச்சம்**

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி/எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

Q11 சிறுவர்கள் சிறுவயதிலிருந்தே ____________ உணவுப் பழக்கத்தை மேற்கொள்வது நல்லது.

(1) அழகான
(2) அளவான
(3) ஆரோக்கியமான
(4) சத்தான

Q12 மழை வருவதற்கு அறிகுறியாக மேகங்கள் ஒன்று ____________ கறுத்துக் காணப்பட்டன.

(1) திரண்டு
(2) திரண்ட
(3) திரள
(4) திரட்ட

Q13 சிறுவன் ஒருவன் விளையாட்டுத் திடலில் விளையாடும்போது கல் __________ கீழே விழுந்தான்.

(1) தடுமாறி
(2) பிடித்த
(3) அடித்து
(4) தடுக்கி

Q14 கடல் அசுத்தத்தால் கடலில் உள்ள மீன்கள் பெரிதும் ____________ ஆய்வுகள் கூறுகின்றன.

(1) பாதிக்கப்பட
(2) பாதிக்கப்படுவதாக
(3) பாதிக்கப்படும்
(4) பாதிக்கப்பட்ட

Q15 திரைப்படக் கதாநாயகன் போல் ____________ வந்த சிறுவன் ஒருவன் வசனம் பேசி தன் நண்பர்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்தான்.

(1) வேடமிட்டு
(2) நடித்த
(3) அணிந்து
(4) துணிந்து



**<u>A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்</u> (10 மதிப்பெண்கள்)**

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு, அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**

ஜூன் பள்ளி விடுமுறை ஆரம்பித்தது. ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்காக முகாம் ___(Q16)___ ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த முகாம் கிழக்குக் கடற்கரைப் பூங்காவில் நடைபெற்றது. மாணவர்கள் பள்ளிப் பேருந்தில் அங்குச் சென்றனர். அவர்கள் முகாமில் ___(Q17)___ கலந்து கொண்டனர்.

பொறுப்பாசிரியர் மாணவர்களை ஆறு குழுக்களாகப் பிரித்தார். ஒவ்வொரு குழுவிலும் ஆறு மாணவர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் தலைவராக ___(Q18)___. பின்னர், ஆசிரியர் ஒவ்வொரு குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கும் அவரவர் பணிகளை விளக்கிக் கூறினார். அதன்பின், மாணவர்கள் தங்கள் கூடாரங்களை அமைக்கத் தொடங்கினர். சற்று நேரத்தில் மழை பெய்ய ஆரம்பித்தது. ___(Q19)___, சில நடவடிக்கைகள் மறுநாள் ஒத்தி வைக்கப்பட்டன. இருப்பினும் மாலையில் மழை நின்றதும் அனைவரும் மிதிவண்டி ஓட்டினர். ___(Q20)___ இரண்டு நாட்களும் அவர்கள் திட்டமிட்டபடி முகாமை முடித்துக்கொண்டு பள்ளி திரும்பினர். இந்த முகாமின் வழி மாணவர்கள் குழு வேலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டனர்.

Q16
(1) ஒன்றை
(2) ஒன்று
(3) ஒரு
(4) ஒன்றும்

Q17
(1) தீவிரத்துடன்
(2) கலக்கத்துடன்
(3) துணிச்சலுடன்
(4) ஆர்வத்துடன்

Q18
(1) நியமிக்கப்பட்டார்
(2) கூறப்பட்டார்
(3) அமைக்கப்பட்டார்
(4) உருவாக்கப்பட்டார்

Q19
(1) இருப்பினும்
(2) ஆனால்
(3) ஆகையால்
(4) அப்போது

Q20
(1) மறு
(2) அடுத்த
(3) கடந்த
(4) வருகிற

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

**பகுதியைக் கவனமாகப் படிக்கவும்**

வளவன் என்ற அரசன் மக்கள் நலனில் அக்கறை கொண்டவன். அவன் தன் ஊரையும் அந்நாட்டு மக்களையும் மிகவும் நேசித்தான். ஒருநாள் திடீரென்று அவன் விசக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டான். அவன் நோய்வாய்ப்பட்டு, பல நாள்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். இதனைக் கேள்வியுற்ற நாட்டு மக்கள் மிகவும் வருந்தினர். அவனைப் பார்க்க அந்நாட்டு மக்களும் அண்டை நாட்டு அமைச்சர்களும் வந்த வண்ணம் இருந்தனர். அவர்கள் பலவித பழங்களையும் சத்துள்ள உணவு வகைகளையும் மன்னனுக்குக் கொண்டு வந்து கொடுத்து நலம் விசாரித்தனர். மன்னரின் நிலையைக் கேள்வியுற்ற அண்டை நாட்டு விவசாயி ஒருவர் அரண்மனைக்கு வந்தார். அவனது தோற்றத்தைக் கண்டு தடுத்து நிறுத்திய காவலாளிகளை அலட்சியப்படுத்திவிட்டு, மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான்.

அவனது கலைந்த தலைமுடியும் களைத்த முகமும் கந்தல் ஆடையும் அவன் வெகுதூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதைத் தெரிவித்தன. அவன் மன்னனிடம், "அரசே! தாங்கள் உடல் நலம் தேறி விரைவில் குணமடைய வேண்டுமென நான் கடவுளிடம் வேண்டிக்கொண்டேன். மேலும் நான் சுயமாகச் செய்த மூலிகையையும் கொண்டு வந்துள்ளேன். இதனை நீங்கள் தேய்த்துக் குளித்தால் எந்த நோயாக இருந்தாலும் பறந்து போய்விடும். தயவுசெய்து மறுக்காதீர்கள்!" என்றான்.

அவன் மூலிகையை வெளியே எடுத்ததும் அதிலிருந்து கெட்டுப்போன வாடை வந்தது. அங்கிருந்த அமைச்சர்கள் மூக்கைப் பொத்திக்கொண்டார்கள்; முகம் சுளித்தார்கள். அரசனோ, அவற்றைப் பொருட்படுத்தாமல் களிப்புடன் மூலிகையைப் பெற்றுக்கொண்டு, தன் கழுத்தில் இருந்த முத்துமாலையைக் கழற்றி அந்த விவசாயிக்குப் பரிசாக அளித்தான்.

மன்னனுக்கு நெருக்கமான அமைச்சர் ஒருவர், "அரசே! கெட்டுப்போன மூலிகைக்கா முத்து மாலை பரிசு?" என்று கேட்டார். மன்னனோ, அது கெட்டுப் போயிருந்தாலும் அந்த மூலிகையைத் தேய்த்துக் குளித்துக் குணமடைய வேண்டும் என்று விரும்பிக் கள்ளங்கபடமற்ற மனத்துடன் தன் கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான். அவனது தூய அன்பு போலித்தனம் இல்லாதது. **நான் அளித்த முத்துமாலைக்கூட அவனது அன்புக்கு ஈடாகாது!** என்று கூறினான். நமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே வந்து நமக்கு உதவி புரிவார் என்று அரசன் புன்னகையுடன் கூறினான்.

(தழுவல்: சிறுவர்க்கான குட்டிக்கதைகள்)

**Q21 முதல் Q25 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள்)**

Q21 நாட்டு மக்கள் எதனைக் கேள்விப்பட்டனர்?

(1) அரசனின் நல்ல குணத்தை
(2) அரசன் மக்கள்மீது அக்கறை கொண்டவன் என்பதை
(3) அரசன் உடல் நலமின்றி இருந்ததை
(4) அரசனைக் காண மக்கள் அரண்மனைக்குச் செல்வதை

Q22 காவலாளிகள் விவசாயியை ஏன் அரண்மனைக்குள் செல்ல அனுமதிக்கவில்லை?

(1) அவர் ஒரு ஏழை விவசாயி என்பதால்
(2) அவரது கெட்டுப்போன மருந்தைக் கண்டதால்
(3) அவர் மிகவும் களைப்பாகக் காட்சியளித்ததால்
(4) அவரது உருவத்தோற்றம் அருவருப்பாக இருந்ததால்

Q23 அரசன் எவற்றைப் பொருட்படுத்தவில்லை?

(1) அமைச்சர்களின் செயற்பாடுகளை
(2) விவசாயி கொண்டு வந்த மூலிகைகளை
(3) விவசாயியின் கலைந்த முடியையும் தோற்றத்தையும்
(4) விவசாயி தூரத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பதை

Q24 **"நான் அளித்த முத்துமாலைக்கூட அவனது அன்புக்கு ஈடாகாது!"** என்ற வாக்கியத்தில் **அன்புக்கு ஈடாகாது** என்பது எதைக் குறிக்கிறது?

(1) விவசாயியின் கள்ளங்கபடமற்ற உள்ளத்தை
(2) அன்பு என்பது விலைமதிப்பற்றது என்பதை
(3) தூய அன்புடன் கொடுக்கப்பட்ட மூலிகையை
(4) விவசாயி ஒரு வாரம் நடந்து வந்து தன்னைப் பார்த்ததை

**சொற்பொருள்**

**Q25-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)**

Q25 களிப்புடன்

(1) மகிழ்வுடன்
(2) இரக்கத்துடன்
(3) அன்புடன்
(4) பெருமையுடன்

# தாள் 2 – ‘அ’ பிரிவு மீள்நோக்க உத்திமுறைகள்

1. வேற்றுமை – வாக்கியத்தைப் படித்துவிட்டு தன்னைத் தானே வினவிக்கொள்ளுதல்

2. கொடுக்கப்பட்டுள்ள தொ.2-தொ.6க்கான செய்யுள் பழமொழிகள் மற்றும் திருக்குறள்களை மனப்பாடம் செய்து வைத்துக்கொள்ளுதல்



3. முன்னுணர்வு – பகுதியை முழுமையாகப் படித்துவிட்டு, தெரிவுகளையும் படித்துவிட்டு பின்பு விடையளித்தல்.

4. தெரிவுவிடை – விடை அல்லாத தெரிவுகளை முதலில் நீக்குதல்

5. பகுதியில் விடையைக் கண்டறிந்து அடிக்கோடிடுதல்



# புத்தகம் B

- ஒலி வேறுபாட்டுச் சொற்கள் – வினாக்களின் எண்ணிக்கை 4
- கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் – 3 தெரிவுவிடை, 1சுய விடை வினா
- சுயவிடைக் கருத்தறிதல் – வினாக்கள் 7

**"ஆ பிரிவு"**

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

| | |
|---|---|
| Q26 மார்கழி மாதத்தில் பெண்கள் அதிகாலையில் எழுந்து வாசலில் __________ இடுவர். அதை இன்றும் நாம் தமிழ் நாட்டில் காண முடியும். | Q26 (   ) |
| Q27 அம்மா _______ எடுத்து வந்த கோழியைத் தாத்தாவுக்குப் பரிமாறினார். அவர் சுவைத்து உண்டதைப் பார்த்த அம்மா மகிழ்ச்சியடைந்தார். | Q27 (   ) |
| Q28 தாகத்தை ___________ பலர் சுவைநீர் அருந்துவது பழக்கம். ஆனால், தண்ணீரே தாகத்துக்குச் சிறந்தது என்பதை அவர்கள் தெரிந்து கொண்டால் நல்லது. | Q28 (   ) |
| Q29 தேன் மலர்களிலிருந்து தேனீக்களால் சேகரிக்கப்படும் ஒன்று. இது பல வியாதிகளைப் போக்கும் ஓர் _________ மருந்து என்பதே உண்மை. | Q29 (   ) |

| | |
|---|---|
| (1) அறிய | (2) கோலம் |
| (3) தனிக்க | (4) அரிய |
| (5) வறுத்து | (6) கோளம் |
| (7) தணிக்க | (8) வருத்து |

**D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

**பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.**



***பொங்கோல் குழந்தை பராமரிப்பு நிலையம்***

***தொடர்புக்கு - 66881234***

கிளைகள்: செங்காங்/ரிவர்வேல்/பொங்கோல்

**திங்கள் முதல் சனி வரை**

இயங்கும் நேரம்: காலை 7:00 மணி முதல் இரவு 9:00 மணி வரை


***சிங்கப்பூரில் நீண்ட நேரம் திறந்திருக்கும் ஒரே பராமரிப்பு நிலையம்***

- அரசாங்க அங்கீகரிப்பைப் பெற்றது.
- சேவையின் தரத்தால் புகழ்பெற்ற நிலையங்களுள் இதுவும் ஒன்று.
- இங்குள்ள ஆசிரியர்கள் குழந்தை பராமரிப்புத் துறையில் பட்டமும் பயிற்சியும் பெற்றிருப்பதோடு முன் அனுபவமும் உள்ளவர்களாகவும் இருப்பர்.

- குழந்தைகளின் வயதிற்கு ஏற்ப அறிவூட்டும் விளையாட்டுகள் வகைப் படுத்தப்பட்டுக் கற்பிக்கப்படுகின்றன.
- குழந்தைகள் வீட்டுச் சூழலை அனுபவிப்பர்.
- ஒவ்வொரு குழந்தைக்கும் சிறப்புக் கண்காணிப்பு வழங்கப்படுவது எங்களது சிறப்புக்கு ஒரு காரணம்.

***சிறந்த சேவையை குறைந்த விலையில் வழங்குகிறது***

| மாதக் கட்டணமும் பராமரிக்கப்படும் நேரமும் |
|---|
| 'அ' பிரிவு ($300)<br>காலை 7:00 – மாலை 5:00 வரை |
| 'ஆ' பிரிவு ($500)<br>காலை 7:00 - இரவு 7:30 வரை |
| 'இ' பிரிவு ($200)<br>காலை 7:00 - மதியம் 1:30 வரை |
| 'ஈ' பிரிவு ($800)<br>மதியம் 12:00 - இரவு 9.00 வரை |



2020 ஆண்டுக்கான பதிவு. இப்பொழுதே பதிவோருக்குச் சிறப்புக் கழிவு உண்டு. பதிவு செய்யும் முதல் 50 பெற்றோர்களுக்குக் கட்டணத்தில் 20% கழிவு உண்டு.

**இந்த அரிய வாய்ப்பை நழுவ விடாதீர்கள்.**



**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையைக் கண்டறிந்து எழுது.**

**(10 மதிப்பெண்கள்)**

Q30 இந்த விளம்பரத்தின் நோக்கம் என்ன?
(1) சிறந்த குழந்தை பராமரிப்பு நிலையம் என்பதைக் கூறுவது
(2) நிலையம் குழந்தைகளை நன்கு பார்த்துக்கொள்ளும் என்று கூறுவது
(3) குழந்தைகளை இந்நிலையத்தில் சேர்க்க அழைப்பு விடுப்பது
(4) நிலையம் குறைந்த கட்டணத்தில் இயங்குகிறது என்று கூறுவது ( )

Q31 இந்நிலையம் மற்ற நிலையங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?
(1) நீண்ட நேரம் சேவை வழங்குகிறது
(2) மூன்று கிளைகளைக் கொண்டுள்ளது
(3) மிகவும் குறைந்த கட்டணத்தில் சேவை அளிக்கிறது
(4) இந்த நிலையம் மிகவும் புகழ் பெற்று விளங்குகிறது ( )

Q32 பணிக்குத் தாமதமாகச் சென்று தாமதமாக வீடு திரும்பும் பெற்றோருக்கு எந்தப் பிரிவு சாதகமாக இருக்கும் என்று நீ நினைக்கிறாய்?
(1) அ – பிரிவு
(2) ஆ – பிரிவு
(3) இ – பிரிவு
(4) ஈ – பிரிவு ( )

Q33 உன் நண்பனின் இரண்டு வயது தம்பியை இந்தக் குழந்தைப் பராமரிப்பு நிலையத்தில் சேர்க்க விரும்பும் பெற்றோருக்கு அதன் சிறப்பை விளக்கி ஒரு குறிப்பு எழுது.

<u>அன்புள்ள நண்பா!</u>

பொங்கோல் குழந்தை பராமரிப்பு நிலையம் மிகவும் புகழ் பெற்ற ஒன்று.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

**D8 சுயமிடைக் கருத்தறிதல்**

**பின்வரும் கதைப்பகுதியைப் கருத்தூன்றிப் படி.**

தொடக்கக் காலத்தில் மனிதன் வாழ்க்கைக்கு அடிப்படையான இருக்க இடம், உடுத்த உடை, உண்ண உணவுக் கூட இல்லாது காடுகளில் அலைந்து திரிந்தான். அவன் காடுகளில் விளைந்த காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றைப் பறித்துச் சமைக்காமலே உண்டு வந்தான். நெருப்பு உண்டாக்கத் தெரியாது மனிதன் காடுகளில் மரங்கள் தீ பற்றி எரிவதைக் கண்டான். ஒரு மரத்தோடு மற்றொரு மரம் உராய்வதால்தான் தீ உண்டாகின்றது என்ற உண்மையைக் காலப்போக்கில் அறிந்து கொண்டான்.

அதிலிருந்து அவன் இரு மரத்துண்டுகளைத் தேய்த்துத் தீ மூட்டக் கற்றுக்கொண்டான். தீ அவனுக்குப் பலவகையில் பயன்பட்டது. மனிதன் தான் தங்கி வாழ்ந்த குகையின் வாயிலில் இரவு நேரத்தில் தீ மூட்டி எரித்தான். நெருப்பு எரிவதைக் கண்ட விலங்குகள் பயந்து ஓடின. அதனால், இரவு நேரங்களில் விலங்குகளால் ஆபத்து நேரும் என்னும் அச்சம் அவனை விட்டு நீங்கிற்று. மனிதன் கம்புகளின் நுனியை நெருப்பில் எரித்துப் பாறைகளில் தேய்த்துக் கூர்மையாக்கினான். அவன் அவற்றை ஈட்டிகளாகவும் அம்புகளாகவும் பயன்படுத்தினான்.

ஆரம்பத்தில் உணவைச் சமைக்காமலே உண்ட மனிதன் நாளடைவில் அதனை நெருப்பில் சுட்டு உண்ணத் தொடங்கினான். அந்த உணவு சுவையாக இருந்ததை அறிந்தான். அக்காலத்தில் சமைப்பதற்குரிய பாத்திரங்கள் இல்லாததால் அவன் உணவை இலையில் வைத்து மடித்து மண்ணால் மூடினான் ; அதன்மீது தீ மூட்டி எரித்தான். பின்னர், குழி தோண்டி மேலே கற்களை அடுக்கி அதன்மேல் உணவை வைத்து அடியில் தீ மூட்டி வாட்டினான். சில காலத்திற்குப் பின்னர் மண்ணைக் கொண்டு பானைகள் செய்யும் வழியைக் கண்டறிந்தான். இன்றைய நவீன பாத்திரங்கள் உருவாக அதுவே ஆரம்பமாகும்.

. மிருகங்கள் வாழ்ந்த அதே காட்டில்தான் மனிதனும் வாழ்ந்தான். அவன் காட்டில் வாழ்ந்த பலவகை விலங்குகளைக் கொன்று அவற்றின் இறைச்சியைச் சமைத்து உண்டான். ஆதியில் இலைகளைக் கோர்த்துத் தன் உடலை மறைத்து வந்தான் மனிதன். அடுத்து விலங்குகளின் தோலை உடையாகத் தைத்து உடுத்திக்கொண்டான். மரக்கிளைகளையும் இலைகளையும் கொண்டு தங்குவதற்கு இடத்தை அமைத்து வெயிலிலும் மழையிலுமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டான். இன்று நாம் வசிக்கும் இல்லங்களுக்கு இதுவே அடிப்படையாக அமைந்தது என்று கூறலாம்.

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (22 மதிப்பெண்கள்)**

Q34 தொடக்கக் காலத்தில் மனிதன் எப்படியெல்லாம் சிரமப்பட்டான்? (3ம.எ)

Q35 மனிதன் எவ்வாறு தீ மூட்டக் கற்றுக்கொண்டான்? (3ம.எ)

Q36 மனிதன் தான் வாழ்ந்து வந்த குகை வாயிலில் ஏன் தீ மூட்டினான்? (3ம.எ)

Q37 ஆதிமனிதன் தன்னை ஆபத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள எவ்வாறு ஆயுதங்களைத் தயார்ப்படுத்தினான்? (3ம.எ)

Q38 மனிதனைச் சமைத்து உண்ணத் தூண்டியது எது? (3ம.எ)

Q39 முதலில் மனிதன் எவ்வாறு உணவைச் சமைத்து உண்டான்? (3ம.எ)

Q40 மிருகங்களால் மனிதனுக்கு ஏற்பட்ட நன்மைகள் யாவை? (4ம.எ)

--- முற்றும் ---

# தாள் 2 – ‘ஆ’, ‘இ’ பிரிவு மீள்நோக்கும் வழிமுறைகள்

1. ஒ.வே – கொடுக்கப்பட்டுள்ள ஒ.வேறுபாடு கையேட்டை மனப்பாடம் செய்து வைத்துக்கொள்ளுதல்.

2. கருத்துவிளக்கப்படம் – விளம்பரத்தை நன்கு புரிந்துகொண்டு விடை அல்லாத தெரிவுகளை முதலில் நீக்குதல்.



3. சுயவிடை – பகுதியில் முக்கிய சொற்களையும் விடைகளையும் அடிக்கோடிடுதல். முழு வாக்கியங்களில் விடையளித்தல். வினாச்சொற்களைக் கவனத்தில் கொள்ளுதல்.



## 4. எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்ற வினா

- கருத்து விளக்கப்படம் அல்லது சுயவிடையில் சோதிக்கப்படும்.

- முழு விளம்பரம் அல்லது கதையிலிருந்து தேர்தெடுத்து எழுதுவது போல விடை அமையும்.

- கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தைத் தொடர்ந்து எழுத வேண்டும்.



- முழு வாக்கியங்களாக அமைத்தல் அவசியம்.

- குறிப்புச் சொற்களை அல்லது வினாச் சொற்களை அடிக்கோடிட்டு வைத்துக்கொள்ளலாம்.



# கேட்டல் கருத்தறிதல் – 20 ம.பெ

* 6-7 பனுவல்களிலிருந்து 10 தெரிவுவிடை வினாக்கள்

* உரையாடல், கதை, விளம்பரம், அறிவிப்பு, செய்தி, வினாவிற்கு ஏற்ற சரியான படத்தைத் தேர்ந்தெடுத்தல் போன்ற வகைகளை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் இடம்பெறும். கேட்டல் கருத்தறிதல் தேர்வு குறும்பனுவல் வினாக்களையும் எதிருரை வினாக்களையும் உள்ளடக்கியிருக்கும்.

# தாள் 3

## வாய்மொழி – 50 ம.பெ

**வாய்விட்டு வாசித்தல் (20 ம.பெ)**

- கணினித்திரையில் காணும் வாசிப்புப் பகுதியை மாணவர்கள் வாய்விட்டு வாசிக்க வேண்டும்.

**உரையாடல் (30 ம.பெ)**

- 50-55 வினாடிகளில் அமைந்த ஒளிக்காட்சி ஊக்கக்கூறாக அமையும்

- ஒளிக்காட்சி மாணவர்களின் அனுபவத்திற்கேற்ப அமையும்
- வருணனை (1-2 வாக்கியங்களில், எளிய மொழிநடையில் அமைந்திருக்கும்)

# ஒளிக்காட்சி

***வினாக்கள்***

***(எ–கா)***

* ஒளிக்காட்சியில் நீ பார்த்த ஒரு நல்ல செயலைப்பற்றிக் கூறு.

***உரையாடல்***

***(எ–கா)***

* ஒருவர் உனக்குச் செய்த ஒரு நல்ல செயலைப் பற்றிக் கூறு.



# தூண்டுதல் வினாக்கள்

1. அண்டை வீட்டாரின் உதவியைப் பெறுபவராக நீ இருந்தால் உன் மனநிலை எப்படி இருக்கும்? ஏன்?

2. வேறெந்த வழிகளில் நீ உன் அண்டை வீட்டாரோடு நல்ல உறவை வளர்த்துக்கொள்ளலாம்?

3. அண்டை வீட்டாரிடையே நல்ல உறவை வளர்த்துக் கொள்வதற்கு உன் சமூக மன்றம் எத்தகைய நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்து வருகிறது?

- மாணவர்களது கருத்துரைப்பிற்கேற்ப துருவுதல் வினாக்களும் கேட்கப்படும்.





https://forms.gle/5BFTbxSkspAXq9nU9

Please scan the QR Code for your feedback.

Thank you.

# நன்றி

# உயர்தமிழ்



# தேர்வு அமைப்பு முறை

- படித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய இரு மொழித்திறன்களை மதிப்பிடும் நோக்கத்தோடு உயர் தமிழ்த் தேர்வுத்தாள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**தாள் 1 - கட்டுரை**
**(40 மதிப்பெண்கள்)**

**தாள் 2 - மொழிப்பயன்பாடும் கருத்தறிதலும்**
**(60 மதிப்பெண்கள்)**



தாள் – 1

## கட்டுரை

**இவ்வினாத்தாளில் இரண்டு வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுது. இவ்வினாத்தாளைப் படிப்பதற்கும் வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கும் கட்டுரை எழுதுவதற்கும் 50 நிமிடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வினாவைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 நிமிடங்களுக்கு மேல் செலவிட வேண்டாம்.**

**வினா 1**

பின்வரும் தலைப்பையும் சூழலையும் கொண்டு ஒரு கட்டுரை எழுது.

**நண்பர் ஒருவருக்குச் செய்த உதவி**

உன் நண்பர் ஒருவருக்கு ஒரு பிரச்சனை ஏற்பட்டது. அந்தப் பிரச்சனையைக் கேட்டு நீ அவருக்கு உதவி செய்ய முன்வருகிறாய். அதனால் பல துன்பங்கள் வந்தாலும் உன் முயற்சியினால் அவர் அப்பிரச்சனையிலிருந்து விடுபட்டார்.

வினா 2

கீழே ஒரு கதையின் தொடக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அக்கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்கவும்:

நான் கமலாவைப் பார்த்தபோது அவளிடம் சென்று பேச முயன்றேன். ஆனால், அவள் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டாள். நான்......"



**தாள் 2**

**"அ" பிரிவு**

**A1 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட சொற்கள் பிழையானவை. அவற்றைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள கட்டத்தில் எழுதவும்.**

அன்று பள்ளிவிடுமுறை. கதிர் நீச்சல் குளத்திற்குச் சென்று பொழுதைக் கழிக்க விரும்பினான். அவன் (Q1)**அப்போது** ஆறாம் வகுப்பில் படித்து வருகிறான். அவனுக்கு நன்றாக நீந்தத் தெரியும். அவன் பாலர் பள்ளியில் படிக்கும்போதே அவனது அப்பா அவனை நீச்சல் பயிற்சிக்கு அழைத்துச் (Q2)**சென்றனர்**. அவர் ஒரு நீச்சல் பயிற்றுவிப்பாளர் என்பதால் அவனுக்கு அவரே நீந்தக் கற்றுக்கொடுத்தார். ஒவ்வொரு வார இறுதியிலும் அவன் தன் (Q3)**தந்தையினால்** நீச்சல் குளத்திற்குச் சென்றுவிடுவான். அவனது தந்தை மற்றக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதைப் (Q4)**பார்த்தால்** அவனது ஆர்வம் மேலும் வளர்ந்தது. பல வருடங்களாகப் பயின்று வரும் அவன் பல போட்டிகளில் பங்கேற்றுள்ளான். சென்ற மாதம் (Q5)**நடக்கும்** வட்டாரப் போட்டியில் நூறு மீட்டர் நீச்சல் போட்டியில் அவன் முதல் பரிசை வென்றான். அவனும் தன் தந்தையைப் போல் ஒரு நீச்சல் பயிற்றுவிப்பாளராக ஆக வேண்டும் என்று விரும்புகிறான்.

| | |
|---|---|
| Q1 | |
| Q2 | |
| Q3 | |
| Q4 | |
| Q5 | |



**A2. வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்து எழுதவும். அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியம் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்.**

Q6 அரசாங்கம் முன்னோடித் தலைமுறையினருக்குப் பல சலுகைகளை வழங்கி வருகிறது.

அரசாங்கத்தால் முன்னோடித் தலைமுறையினருக்குப் பல சலுகைகள் ______

______________________________________________

Q7 ஊழியர்கள் தங்கள் திறன்களை மேம்படுத்திக்கொள்வதன் வழி தங்கள் வேலைகளைத் தக்க வைத்துக்கொள்ளலாம்.

தங்கள் வேலைகளைத் தக்க வைத்துக்கொள்ள ஊழியர்கள் ______________

______________________________________________

Q8 மாணவர்கள் மேற்கொள்ளும் கற்றல் பயணம் அவர்களின் அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள உதவுகிறது.

மாணவர்கள் மேற்கொள்ளும் கற்றல் பயணத்தினால் ____________________

______________________________________________

Q9 ஆசிரியர்கள் ஏட்டுக்கல்விக்கு மட்டுமல்லாது அறநெறிப் பண்பு வளர்ச்சிக்கும் அதிக முக்கியத்துவம் தருகிறார்கள்.

ஆசிரியர்களால் ஏட்டுக்கல்விக்கும் அறநெறிப் பண்பு வளர்ச்சிக்கும் ________

______________________________________________

Q10 காலத்திற்கேற்ற திரையிசைப் பாடல்களை எழுதிய கவிஞர் கண்ணதாசனைத் தமிழ் உலகமே போற்றிப் பாராட்டுகிறது.

கவிஞர் கண்ணதாசனைத் தமிழ் உலகமே போற்றிப் பாராட்டக் காரணம்

______________________________________________



## 'ஆ' பிரிவு

**B3 கருத்தறிதல் 1 (16 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு விடை எழுதவும்.**

1 சாமிநாதன் பிரபலமான நிறுவனம் ஒன்றை நடத்தி வந்தார். அவர் தம் தொழிலாளர் நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து நிர்வாகத்தைச் சிறப்பாக நடத்தினார். அதனால், தொழிலாளர்கள் குறை ஏதுமின்றி மனநிறைவுடன் வேலை செய்து வந்தார்கள். தொழிலாளர்களின் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளைக் கேட்டு அவற்றைக் களைவதோடு அவர்களுக்குப் பண உதவியும் செய்து வந்தார். தொழிலாளர்களும் மிகுந்த அக்கறையுடன் நிறுவனத்தில் பணி புரிந்து வந்தனர்.

2 சாமிநாதனின் ஒரே மகன் முகிலன். அவருக்குப் பிறகு நிறுவனப் பொறுப்பை ஏற்கப் போகிறவன் அவன்தான். ஆனால், முகிலன் தன் திறமைகளை வளர்த்துக்கொள்ளவும் பொறுப்புகளை ஏற்கவும் விரும்பவில்லை. இதைப் பற்றிச் சாமிநாதன் தம் மகனிடம் பேசிப்பார்த்தார். தமக்குப் பிறகு பொறுப்பேற்கவிருக்கும் அவனிடம் நிர்வாக நுணுக்கங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். ஆனால், முகிலனோ தனக்கு நிர்வாகப் பொறுப்பில் ஆர்வம் இல்லையென்று அலட்சியமாகச் சொல்லிவிட்டான். முகிலனின் பதில் தந்தைக்கு மிகுந்த வேதனை அளித்தது.

3 சில நாள்களுக்குப் பின் முகிலனின் தந்தை திடீரென்று நோய்வாய்ப்பட்டுப் படுத்தப்படுக்கையானார். இதனால், நிறுவனத்தை ஏற்று நடத்த வேண்டிய கட்டாயம் முகிலனுக்கு ஏற்பட்டது. நிறுவனத்தின் மூத்த அதிகாரிகள் அவனை அதிகாரியாக ஏற்றுக் கொண்டார்கள். நிறுவனத்தை எப்படி நடத்தப்போகிறோம் என்ற பயமும் குழப்பமும் அவனுக்கு ஏற்பட்டன. இச்சூழ்நிலையில், முகிலன் தன் நெருங்கிய நண்பன் குமரனிடம் தன் பிரச்சனையைக் கூறினான். குமரன் ஒரு 'பசுத்தோல் போர்த்திய புலி'. இதை அறியாத முகிலன், குமரனின் ஆலோசனையைக் கேட்டு நிறுவனத்தைத் தொடங்கினான். முகிலன் தன் மீது அதிக நம்பிக்கை வைத்திருப்பதைக் குமரன் புரிந்துகொண்டான். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவன் முகிலனிடமிருந்து நயவஞ்சமாகப் பணம் பறித்தான். குமரனின் தவறான ஆலோசனையால் நிறுவனத்துக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டது.

4 இது முகிலனுக்கு நல்ல பாடமாக அமைந்தது. எதையும் தெரிந்துகொள்ளாமல் விளையாட்டுத்தனமாக இருந்துவிட்டது எவ்வளவு பெரிய தவறு என்பதை முகிலன் உணரத்தொடங்கினான். அதன்பின், முகிலன் நிர்வாகம் பற்றிய நூல்களைப் படித்தும் அனுபவமிக்க மூத்த அதிகாரிகளிடமிருந்து ஆலோசனைகள் பெற்றும் நிறுவனத்தைத் தொடங்கினான். அவனுடைய முயற்சி வீண்போகவில்லை. வெகு விரைவாக அவன் மிகச் சிறந்த நிர்வாகி ஆனான். நிறுவனமும் நல்ல நிலைக்குத் திரும்பியது.

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதவும்.**

Q11. முதல் பத்தியின்வழிக் கதாசிரியர் வாசகருக்கு உணர்த்த விரும்பும் முக்கியக் கருத்து யாது? பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதற்குப் புட்குறி(√) இடவும். உன் விடைக்கான காரணங்களைக் கதையின் துணைகொண்டு எழுதவும்.

(4 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| தொழிலாளர்கள் நிர்வாத்தை மிகவும் சிறப்பாக நடத்தி வந்தனர் | |
| சாமிநாதன் தன் நிர்வாகத்தின் மீது மிகுந்த அக்கறை காட்டி வந்தார் | |
| சாமிநாதன் தொழிலாளர்களின் நலனையே தம் நலனாகக் கருதினார் | |

Q12-Q13

கதையை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் ஒவ்வொரு வாக்கியமும் சரியா தவறா என்று எழுதவும். பின்னர், உன் விடைக்கான காரணத்தை எழுதவும். (4 மதிப்பெண்கள்)

| | வாக்கியம் | சரி / தவறு | காரணம் |
|---|---|---|---|
| Q12 | முகிலன் தன் தந்தையின் விருப்பத்திற்கேற்ப நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாரானான் | | |
| Q13 | குமரன் தன் நண்பன் முகிலனிடம் உண்மையாக நடந்து கொள்ளவில்லை. | | |

Q14 பின்வரும் தலைப்புகளில் எந்தத் தலைப்பு இக்கதைக்கு மிகப் பொருத்தமாக இருக்கும்? அதற்குப் புட்குறி (√)இடவும். உன் விடைக்கான காரணங்களை எழுதவும். (4 மதிப்பெண்கள்)

| | | | |
|---|---|---|---|
| அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம் | | தன் கையே தனக்கு உதவி | |

Q15 2-ஆம் பத்தியில் மகனின் பதில் தந்தைக்கு மன வருத்தத்தை உண்டாக்கியது என்பதை எந்தச் சொல் உணர்த்துகிறது? அதைக் கண்டறிந்து எழுதவும். (2 மதிப்பெண்கள்)

Q16 3-ஆம் பத்தியில், 'நட்டம்' என்னும் பொருளை உணர்த்தும் சொல் இடம்பெற்றுள்ளது. அதைக் கண்டறிந்து எழுதவும். (2 மதிப்பெண்கள்)

## 'இ' பிரிவு

**C4 கருத்தறிதல் 2** (24 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.**

காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது என்பர் சான்றோர். காலத்தைச் சிறிதும் வீணாக்காமல் அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது சிறந்தது. அப்போதுதான் ஒருவரால் தான் மேற்கொண்ட பொறுப்பையும் சிறப்பாகச் செய்ய இயலும். இவர்களே நேரத்தின் அருமையையும் உணர்ந்தவர்கள். சோம்பலுடன் பணிகளைத் தள்ளிப்போடும் பழக்கத்தால் பலர் வாழ்க்கையில் பல இன்னல்களைச் சந்திக்க நேர்கிறது. அதனால், அவர்கள் வாழ்க்கையில் தோல்விகளையே சந்திக்கிறார்கள். பின்னர் எனக்கு நேரமே சரியில்லை என்று காலத்தைக் குறை கூறுவார்கள்.

சிலர் கடந்த காலத்தில் தாங்கள் தவறவிட்ட **வாய்ப்புகளையும்** காலத்தையும் எண்ணி வருந்துவதிலேயே பொழுதைக் கழிக்கிறார்கள். சிலர் எதிர்காலத்தை எண்ணி கனவு காண்கின்றனர். ஆனால், நிகழ்காலத்தால் மட்டுமே அவற்றைச் சரி செய்ய முடியும் என்பதை அவர்கள் உணர்வதில்லை. இவர்கள் திட்டமெல்லாம் திட்டமிட்ட நிலையிலேயே இருக்கும். ஆனால், அவற்றைச் செயல்படுத்துவதற்கான துணிச்சலை அவர்கள் திரட்டுவதில்லை. நம் வாழ்க்கையை ஒரே இரவில் மாற்றிக் காட்டும் மாபெரும் சக்தி துணிச்சலுக்கு உண்டு. துணிச்சல் இருக்குமானால் தடைகளும் அவை ஏற்படுத்தும் இன்னல்களும் மாயமாய் மறைந்து போய்விடும்.

கடல்பகுதிகளின் ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல் ஒரே இலட்சியத்துடன் கப்பலை இயக்கிச் சென்ற கொலம்பஸின் துணிச்சலைப் பாராட்டாமல் இருக்க முடியாது. குழம்பிக் கிடந்த மாலுமிகளை நோக்கி, "கப்பலைச் செலுத்துங்கள்!" என்று அவரை ஊக்குவிக்க வைத்ததும் அவரது துணிச்சலே. அத்துணிச்சலினாலேயே அவர் தமது இடைவிடாத பயணத்தால் வெற்றியும் பெற்றார்.

**மனிதன் முயற்சி செய்வதை விடும் வேளையில் தோல்வியைத் தழுவுகிறான்.** "நான் சிறுகதை எழுதத் தொடங்கி முதல் இருநூறு சிறுகதைகள் வரை பத்திரிக்கைகள் பிரசுரிக்காமல் திருப்பி அனுப்பின. ஆயினும், அதுவே எனக்கு மீண்டும் மீண்டும் புதுப்புது கதைகள் எழுதத் தூண்டுதலாக அமைந்தது. எழுதுவதை நிறுத்தாமல் தொடர்ந்து எழுதிப் பத்திரிக்கை ஆசிரியர்களுக்கு அனுப்பிக்கொண்டே இருந்தேன். பிறகுதான் தமிழின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவனாக ஏற்றுக்கொள்ளப்பட்டேன்," என்று கூறியவர் பிரபல தமிழ் எழுத்தாளர் நா. பார்த்தசாரதி.

வாழ்க்கையில் ஆங்காங்கே சரிவுகள் ஏற்படும்போது அதன் தன்மையை ஆராய்ந்து அதனைக் **களைய** வேண்டும். தோல்வியே வெற்றிக்கு வழி என்பதை அறிந்து துணிச்சலுடன் மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும். அச்சமயம் ஏற்படும் இன்னல்களை ஊக்குவிப்பாக எடுத்துக்கொள்ள வேண்டும். எடுபடும் காரியத்தில் கண்ணும் கருத்துமாகச் செயல்பட்டால் நம்மால் எதையும் சாதிக்க முடியும் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

Q17 எத்தகையோரால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் ? (3 மதிப்பெண்கள்)

______________________________

______________________________

______________________________

______________________________

Score:

Q18 நேரத்தைக் குறை கூறுபவர்கள் யார்? ஏன்? (4 மதிப்பெண்கள்)

______________________________

______________________________

______________________________

______________________________

Score:

Q19 நிகழ்காலம் மிக முக்கியமாகக் கருதப்படக் காரணம் என்ன? (3 மதிப்பெண்கள்)

______________________________

______________________________

______________________________

______________________________

Score:

Q20 துணிச்சல் ஒரு மாபெரும் சக்தி என்பதை எவ்வாறு அறியலாம்? (3 மதிப்பெண்கள்)

______________________________

______________________________

______________________________

______________________________

Score:

Q21 **மனிதன் முயற்சி செய்வதை விடும் வேளையில் தோல்வியைத் தழுவுகிறான்** என்பதை நன்கு அறிந்திருந்த நா. பார்த்தசாரதி எவ்வாறு வாழ்க்கையில் வெற்றி பெற்றார்?

(3 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Score:

Q22 எப்போது ஒருவர் நினைத்ததைச் சாதிக்க முடியாது என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார்? (4 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Score:

Q23 **பொருள் எழுது** (4 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை உணர்த்தும் வேறொரு சொல்லைக் கோட்டில் எழுதவும்.

அ. வாய்ப்புகளையும் - ______________________ ( 2 மதிப்பெண்கள் )

ஆ. களைய - ______________________ ( 2 மதிப்பெண்கள் )



# கருத்தறிதல் 1

## கருத்தறிதல் வினாக்களின் தன்மைகள்

- உயர் சிந்தனை வாசிப்புக் கருத்தறிதல் திறன்களையும் சொல்வளத்தையும் சோதிக்கும் வகையில் அமையும்.

எடுத்துக்காட்டாக

- ஊகித்தறிதல்
- காரணகாரியத்தைக் கண்டறிதல்
- கருத்துகளுக்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிதல்
- ஒரு கருத்து சரி அல்லது தவறு என்பதைக் காரணங்களோடு விவரித்தல்



- மையக் கருத்தை அல்லது முக்கியக் கருத்தை அடையாளங் காணுதல்

- பனுவல்களில் இடம்பெற்றுள்ள அருஞ் சொற்களுக்கு இடம் நோக்கிப் பொருள் அறிதல்

➢ கருத்தறிதல் 1- இன் வினாக்கள் பல்வேறு வடிவ அமைப்புகளில் அமையும்

➢ மாணவர்கள் பனுவல்களை ஆழ்ந்து படித்து, கருத்துணர்ந்து தம் புரிந்துணர்வைப் புலப்படுத்தும் வகையில் வினாக்களுக்கு இலக்கணப் பிழைகளின்றி விடையளிக்க வேண்டும்.



# உயர்தமிழ் மீள்நோக்க உத்திமுறைகள்

- தமிழ் செய்தித்தாள் அல்லது கதைப்புத்தகங்களை வாசித்தல்
- அருஞ்சொற்களைச் சேகரித்து சொல்வளத்தைப் பெருக்கிக்கொள்ளுதல்
- தமிழ்ச் செய்தியில் இடம்பெறும் ‘தினம் ஒரு சொல்’



# நன்றி